மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்லக் கூடிய அளவிலே இங்கே கேட்க வேண்டாம் என்று நான் சொல்லி யிருக்கிறேன்.. .... (குறுக்கீடு) எல்லா கால் அட்டென்ஷன்களையும் அப் ஜக்ட் பண்ண சொல்லி விட்டேன். ஒன்றுக்குக் கொடுத்தால் இன்னொன்று வரும்........ (குறுக்கீடு).

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படுவது —தொடர்ச்சி.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய உரிமைப் பிரச்சினை. நேற்று மாலை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அழைப்பிதழ் கிடைக் கப் பெற்றிருக்கிறது. அது 19–11–1986 முதல் 25–11–1986 வரை நடைபெறுகின்ற ஒரு விழாவிற்கான அழைப்பு. ஆனால் அது 20-ந்தேதி மாலைதான் உறுப்பினர்களுக்கும் கிடைக்கின் கின்றது, என்றால் அந்த அழைப்பு அனுப்புவதன் நோக்கம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவை நடவடிக்கை அல்ல. இது சம்பந்தமாக அமைச்சரிடம் வெளியே கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. எ. எஸ். ரவீந்திரன் : உறுப்பினர்களுடைய உரிமைப் பிரசசினையாகத்தான் நான் இதை கிளப்புகிறேன். அவை நடவடிக்கை என்று நான் கேட்கவில்லை.

(உ) தாய்த் தமிழகத்துடன் இணைய போராடிய தியாகிகளுக்கு பென்ஷன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்த் தமிழகத்துடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைய வேண்டும் என்பதற்காகப் போராடிய தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்க வேண்டும் என்கின்ற விதத்தில் அவர்களுக்கு எமர்ஜென்சிக்கு முன்பாக 1976 வரைக்கும் வழங்கப்பட்டு வந்த பென்ஷன், எமர்ஜென்சி டிக்ளேர் ஆன பிறகு நிறுத்தி வைக்கப் பட்டு இருக்கிறது. அதை மீண்டும் வழங்க வேண்டுமென்று.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் அனுமதி பெற வில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் வந்த போது நீங்கள் இல்லை.